**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: STC No.393/2021**
**Deposition of witness for prosecution –DW–1**

| | | |
|---|---|---|
| Name | : | மேனகா |
| Husband Name | : | நீதிமணி |
| Village | : | சேலம் |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 42 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central act 44 of 1969) on the 03rd day of September 2025.

**முதல் விசாரணை:**

நான் மேற்படி முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆதார் கார்டு என்னுடையது தான். மேற்படி எனது அசலுடன் ஒப்பிடப்பட்ட ஆதார் கார்டு **எ.ம.சா.ஆ.1** ஆகும். இவ்வழக்கின் எதிரி எனது கணவர் ஆவார். இந்த வழக்கில் நான் இரண்டாவது எதிரியாக சேர்க்கப்பட்டிருந்தேன். என்மீது இருந்த வழக்கு உச்சநீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. இவ்வழக்கின் புகார் தாரர் சவரி முத்து யார் என்று எனக்கு தெரியாது. Bullion filtech LLP என்ற நிறுவனத்தின் மீதும் என் கணவர் மீதும் என் மீதும் இராமநாதபுரம் பஜார் காவல் நிலையத்தில் குற்ற எண் 347/2020 என்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கு பதிவு செய்வதற்கு முன்பாக ஜுன் 5 2020ம் வருடம் இரவில் என்னையும் எனது கணவரையும் வழக்குவிசாரணை என்று இராமநாதபுரத்திற்கு அழைத்து வந்து ஜுன் 9ம் தேதி வழக்கு பதிவு செய்தார்கள். ஜுன் 9 2020ல் எனது கணவரை நீதிமன்ற காவலுக்கு

உட்படுத்தினார்கள். செப்டம்பர் 9 2020 அன்று எனது கணவர் சிறையில் இருந்து வெளியில் வந்தார். செப்டம் பர் 10ம் தேதியில் இருந்து 16ம் தேதி வரை எனது கணவர் இராமநாதபுரம் நீதித்துறை நடுவர் எண்1 நீதிமன்றத்தில் காலையும் மாலையும் கையொப்பம் செய்து வந்தார். அப்போது அவர் இங்கு தான் தங்கி இருந்தார். அதன்பிறகு அவருக்கு மிரட்டல் வந்த காரணத்தினால் அவரது நிபந்தனை செங்கல்பட்டு நீதித்துறை நடுவர் எண் 1க்கு மாற்றப்பட்டது. அப்போது செங்கல்பட்டில் தங்கி ஒரு வாரம் காலையும் மாலையும் கையொப்பம் செய்தார். அதன்பிறகு மேற்படி நிபந்தனை மதுரை பொருளாதார குற்றப்பிரிவுக்கு மாற்றப்பட்டு நவம்பர் 2020 வரை மேற்படி புகார் குற்றபிரிவில் கையொப்பம் செய்து வந்தார். மேற்படி இராமநாதபுரம் பஜார் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யும் போது நாங்கள் டாக்டர் கமலமனோர், கதவு எண்102, டிடிகே ரோடு, ஆள்வார்பேட்டை சென்னையில் குடியிருந்து வந்தோம். மேற்படி வாடகை வீட்டில் இருந்தோம். அந்த வாடகை வீட்டிற்காக ஒத்தி பத்திரம் நகல் **எ.ம.சா.ஆ.2** ஆகும். மேறப்டி ஒத்தி பத்திரத்தின் அசல் வீட்டின் உரிமையாளரிடம் உள்ள காரணத்தினால் எ.ம.சா.ஆ 2 ஐ நகலாக தாக்கல் செய்கிறேன். (மேற்படி ஆவணமானது ஆனது நகல் ஆக உள்ளதால் மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது). மேற்படி வீட்டை நான் ஜூலை 16 2020 அன்று காலி செய்தேன். நான் காலி செய்த போது நானும் வீட்டின் உரிமையாளரும் அட்வான்சை திருப்பி பெற்றகக்கொண்டதற்காக கொடுத்த ஒப்புகை ரசீது நகல் **எ.ம.சா.ஆ.3** ஆகும். மேறப்டி எம.சா.ஆ.3 ஆவணத்தின் அசல் வீட்டின் உரிமையாளரிடம் உள்ள காரணத்தினால் எ.ம.சா.ஆ 3 ஐ நகலாக தாக்கல் செய்கிறேன். (மேற்படி ஆவணமானது ஆனது நகல் ஆக உள்ளதால் மனுதார்ர் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது). நான் ஜூலையில் வீட்டை காலி செய்த பிறகு சென்னையில் குடியிருந்து வரவில்லை. இந்நிலையில் செப்டம்பர் மாதம் சென்னை வந்து புகார் தாரர் என்னிடம் மேற்படி குடியிருந்து வந்த வீட்டில் வழக்கு சம்பந்தமாக காசோலை வாங்கினார் என்பது பொய்யாகும். இந்த வழக்கு பொய் வழக்காகும்.

புகார் தாரர் தரப்பு குறுக்கு விசாரணை

இல்லை.

மறு விசாரணை

இல்லை.